தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2019

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(எ - கா)

ஆழிக்குமரன் ஆனந்தன் ஓர் ஈழத்தமிழன் .

( இந்தியத் தமிழன், ஈழத்தமிழன், மலேசியத்தமிழன் )

1. காப்பியங்களில் ஒன்று ____________ .

( மூதுரை, திருக்குறள், மணிமேகலை )

2. ஆலும் வேலும் ____________ உறுதி.

( பல்லுக்கு, கண்ணுக்கு, நாவுக்கு )

3. காகம் பறக்கும். அது போல் நத்தை ____________.

( ஊரும், ஓடும், தாவும் )

4. பண்டாரவன்னியனுக்கு ____________ நடுகல் நாட்டப்பட்டுள்ளது.

( நல்லூரில், நவாலியில், கற்சிலைமடுவில் )

5. ____________ விலங்ககம் சென்றனர்.

(நீங்கள், மாணவர்கள், நாங்கள்)

6. ஆற்றங்கரையில் ____________ சாரிசாரியாகச் சென்று கொண்டிருந்தன.

( புறாக்கள், தவளைகள், எறும்புகள் )

7. 80 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .

( எம்பது, எண்பது, என்பது )

8. பழங்காலத்தில் மக்கள் ______________ சென்றனர்.

( சிற்றுந்தில், மாட்டுவண்டியில், பேருந்தில் )

9. அதியர்மான் ______________ க் காட்டுக்குச் சென்றான்.

( உலாவ, வேட்டையாட, விளையாட )

10. இசையோடு பாடி ஆடி நடிப்பதைக் ______________ என்பர்.

( இசை, கூத்து, நாடகம்)

11. வானொலியைக் கண்டுபிடித்தவர் ______________ .

( மார்க்கோனி, கலிலியோ, கிரகம்பெல் )

12. நீருந்துகளில் மிகப்பெரியது ______________ .

( வள்ளம், படகு, கப்பல் )

13. தோழனுக்குத் தோழி போல, நண்பனுக்கு ______________ .

( நண்பி, மாணவி, சிறுமி )

14. இகழ் என்பதன் எதிர்ச்சொல் ______________ .

( காலை, பகல், புகழ் )

15. **ஒலிவட்டு :**

மூதாட்டி சிறுவனின் கடையில் ________________ வாங்கினார்.

( கோப்பி, தேயிலை, சக்கரை )

16. பின்வருவனவற்றில் வேறுபட்ட சொல் ________________ .

( மீன், நண்டு, பன்றி )

17. சிங்கத்தின் தோட்டத்தில் ________________ பட்டம் சிக்கியது.

( குரங்கின், புறாவின், முயலின் )

18. தமிழீழத்தின் தேசிய மலர் ________________ .

( கார்த்திகைப்பூ, தாமரைப்பூ, முல்லைப்பூ )

19. பாடல்+போட்டி என்பதைச் சேர்த்து எழுதினால் ________________ .

( பாடல்போட்டி, பாடற்போட்டி, பாடப்போட்டி )

20. கடகம் ________________ செய்யப்படுகின்றது.

( தாளினால், துணியினால், ஓலையினால் )

| புள்ளிகள் 20 |
|---|

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| தேடினாள் | ஆண்டனர் | செதுக்கிய |
| அக்கம்பக்கம் | விறுவிறு | ~~வண்ண வண்ண~~ |

(எ - கா)

பூங்காவில் வண்ண வண்ண ப் பூக்கள் பூத்திருந்தன.

1. ஓவியா ______________ சிற்பத்தை ஆசிரியர் பாராட்டினார்.

2. வீதியைக் கடக்கும் போது ______________ பார்த்துக் கடக்க வேண்டும்.

3. அங்கவை காணாமற் போன நாய்க்குட்டியைத் ______________.

4. தங்கை வீட்டுக்கு ______________ என்று நடந்து சென்றாள்.

5. சேர நாட்டைச் சேர மன்னர்கள் ______________.

புள்ளிகள் 10

**3) மிகப்பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்க.**

**எ - கா**

மீன் பூவினால் உயிர்க்கின்றது.

1. நான் அங்காடியில் பழங்கள் ________________ .

2. காகத்தின் கூட்டில் குயில் முட்டை ________________ .

3. தமிழர் உலகெங்கும் பரந்து ________________ .

4. **பழமொழி:** பூவுடன் சேர்ந்த நாரும் ________________ .

5. எறும்பு புறாவைக் காப்பாற்ற ________________ .

புள்ளிகள் 10

## 4) கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.

எ - கா

______எது______ கடலில் இருந்து பறந்து சென்றது?

( ~~எது~~, எவை )

1. வாழைக் குலையில் காய்கள் ______________ இருக்கும்?

( எப்படி, என்ன )

2. இனியன் ______________ தாயகம் சென்றான்?

( யாருடன், யாருக்கு )

3. ______________ ஆமைகள் குளக்கரையில் நின்றன?

( என்ன, எத்தனை )

4. சிலப்பதிகாரம் ______________க் கூறுகின்றது?

( எவற்றை, எவை )

5. ______________ மூதுரை எழுதப்பட்டது?

( யார், யாரால் )

புள்ளிகள் 05

5) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ப | வா | ழை | ப் | ப | ழ | ம் |
| ழ | மு | கூ | ழ் | வ | டை | இ |
| ச் | று | தே | நீ | ர் | | ள |
| சா | க் | அ | ப் | ப | ம் | நீ |
| று | கு | பொ | ங் | க | ல் | ர் |
| பா | ல் | த | ண் | ணீ | ர் | |
| கொ | மு | க் | க | ட் | டை | |

| உண்பவை | குடிப்பவை |
|---|---|
| எ - கா | |
| வாழைப்பழம் | பழச்சாறு |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |
| ______ | ______ |

புள்ளிகள்10

## 6) மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| மஞ்சள் | உதிரும் | ~~நான்காக~~ |
| காற்று | கோடைகாலம் | காட்சி |

(எ - கா)

தமிழர் பருவகாலங்களை ___நான்காக___ வகுத்துள்ளனர். அவை இலையுதிர்காலம், பனிகாலம், இலைதளிர் காலம், ________________ என்பனவாகும். இலையுதிர்காலத்தில் மரங்களில் உள்ள இலைகள் ________________ நிறமாக மாறும். ________________ வீசும்போது இலைகள் மரத்தில் இருந்து ________________ . இலையுதிர்காலத்துக்குப் பின்னர் வருவது பனிகாலம். இக்காலத்தில் மரங்கள் வெறுமையாகக் ________________ அளிக்கும்.

புள்ளிகள் 10

## 7) ஒரு சொல்லில் விடை எழுதுக.

(எ - கா)

பாரிசு நகரத்தின் ஊடாக ஓடும் ஆற்றின் பெயர் என்ன?

சென்நதி

1. வாழை எத்தனை முறை குலை தரும்?

___

2. புறாவைக் குறி பார்த்தவன் யார்?

___

3. உந்து ஒன்றின் பெயரைத் தருக.

___

4. இறுதியாக இலங்கையைக் கைப்பற்றிய ஐரோப்பியர் யார்?

___

5. வில்லவராயர் வீட்டின் முன் நின்ற மரம் எது?

___

புள்ளிகள் 10

## 8) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கடல் மிகவும் பெரியது. கடலில் கப்பல் செல்லும். மக்கள் கப்பலில் ஏறிச் செல்வர். கடல் நீர் உவர்ப்பாக இருக்கும். கடலில் மீன், நண்டு, இறால் போன்ற உயிரிகள் வாழ்கின்றன. மீனவர்கள் கடலில் வலை வீசி மீன்களைப் பிடிப்பர். அவர்கள் பிடித்த மீன்களை அங்காடியில் விற்பர். இவ்வாறு கடலில் இருந்து பல பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எ - கா

எது மிகவும் பெரியது?

கடல் மிகவும் பெரியது ______________________ .

1. மக்கள் எதில் ஏறிச் செல்வர்?

   ______________________ .

2. கடல் நீர் எப்படி இருக்கும் ?

   ______________________ .

3. கடலில் வாழும் உயிரிகள் இரண்டின் பெயர்களைத் தருக.

   ______________________ .

4. கடலில் மீன்களைப் பிடிப்பவர் யார்?


   ______________________ .

5. கடலில் பிடித்த மீன்களை எங்கே விற்பர்?

   ______________________ .

புள்ளிகள் 10

## 9) படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ____________________________________________

____________________________________________

2. ____________________________________________

____________________________________________

3. ____________________________________________

____________________________________________

4. ____________________________________________

____________________________________________

5. ____________________________________________

____________________________________________

புள்ளிகள் 15